# பத்மனாபபுரம் நகராட்சி

## 22/09/2023 அன்று நடைப்பெற்ற நகர் மன்ற கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருட்கள்

**பொருள் எண்:- 1**

பத்மனாபபுரம் நகராட்சி பராமரிப்பில் உள்ள கீழ்க்கண்ட உரிம இனங்களை 24/08/2023- ல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது விவரம் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ .எண். | உரிம இனம் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர்/விலாசம். | தொகை ரூ. |
|---|---|---|---|
| I)1 | தக்கலை பேட்டை மீன் சந்தை கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கேட்டு எவரும் கலந்து கொள்ளவில்லை. | - |
| 2. | மார்க்கெட் கழிப்பறை கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1)ற்றி. மணிகண்டன் 28/62-1 கோழிப்போர்விளைமுளகுமூடு. | 7000/- (1 வருடம்) |
| 3 | இரு சக்கர வாகனம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1)டி.ஜாண்றோஸ் 13/32-86 இராமன்பறம்புதக்கலை. | 14000/- (1 வருடம்) |
| | | 2)ற்றி. ஏசுதாசன், த/பெ. தங்கையா நாடார் கோயில்விளை சாரோடு, தக்கலை | 15000/- (1 வருடம்) |
| | **கடைகள்** | | |
| II)1) | KNMT- தக்கலை பேட்டை சந்தை உள்புற கடைகள். | ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரி எவரும் முன்வரவில்லை. | - |
| 2) | பேருந்து நிலைய கடைகள் | ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரி எவரும் முன்வரவில்லை. | - |
| 3) | தக்கலை பேட்டை சந்தை பழஉறை உரிமம். | ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரி எவரும் முன்வரவில்லை | - |
| 4) | டவுண்ஹால் கடை எண்-3 | 1)கே. பைசல்கான் S/o. அஹமது கோப்பு பின்னவிளை தேங்காய்ப் பட்டணம் | 3000/- மாத வாடகை |
| | | 2) வி. ஜெயக்குமார் S/o. வேலப்பன் 30/82, வெட்டுக்காட்டுவிளை சாரோடு, தக்கலை. | 4000/- மாத வாடகை |
| | டவுண்ஹால் கடை எண்-4 | 2) வி. ஜெயக்குமார் S/o. வேலப்பன் 30/82, வெட்டுக்காட்டுவிளை | 4000/- மாத வாடகை |

| | | | |
|---|---|---|---|
| | | சாரோடு, தக்கலை. | |
| | டவுண்ஹால் கடை எண்-6 | 1)பி. அபினேஷ்<br>த/பெ. பார்த்திபன்<br>18/60ஜி, பெருமாள் கோவில் தெரு,தக்கலை | 6800/-<br>மாத வாடகை |
| | | 2)ஜெகன்ரால்<br>பண்டாரக்காடு (வளன்தெரு)<br>வில்லுக்குறி | 4750/-<br>மாத வாடகை |
| | டவுண்ஹால் கடை எண்.7 | 1)அபினேஷ்<br>த/பெ. பாத்திபன்<br>18/60G பெருமாள் கோவில் தெருதக்கலை | 7000/-மாத வாடகை |
| | | 2) வி. சாஜி கவின்<br>த/பெ.கே. வின்சென்ட்<br>27/21 வெட்டுக்காட்டுவிளை<br>முளகுமூடு அஞ்சல், | ரூ.5500/-<br>மாத வாடகை |
| 5. | மார்க்கெட் ஐ.யு.டி.பி கடை எண்.4 | ஏலம்/ஒப்பந்தப்புள்ளி<br>கோரி/எவரும்<br>முன்வரவில்லை. | - |
| 6. | மாரக்கெட் உள்புறம் ஸ்டால்கள் கடை எண். 6, 8, 9 | ஏலம்/ஒப்பந்தப்புள்ளி<br>கோரி/எவரும்<br>முன்வ்ரவில்லை. | |

அ.கு:- 1) வரிசை எண். I- ல்- 1 மற்றும் II- ல் 1,2,3,5 மற்றும் 6-க்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி எவரும் முன் வரவில்லை.

2) வரிசை எண்.I - 2- க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளியும் 3-க்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியும் பெறப்பட்டது.

3)டவுண்ஹால் கடைகளில் கடை எண். 3, 6 மற்றும் 7-க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் கடை 4-க்கு ஒரு ஒப்பந்தப்புள்ளியும் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறிப்பிட்ட உயர்ந்த தொகையினை ஒப்பு கொள்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**மன்ற தீர்மானம் எண் 253**
**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்:- 2</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை அருகில் உள்ள மேல் நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் புலியூர்குறிச்சி மேல் நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் வினியோகம் செய்யும் பகுதியில் உள்ள மினி பவர் பம்பில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய வருடாந்திர பராமரிப்பு பணிக்கு நகர் மன்ற தீர்மானம் எண். 250, நாள் 31/07/2013 ரூ.5.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கப்பட்டது. அதன் பேரில் 23/08/2023ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தக்காரரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம். |
|---|---|---|---|---|
| 1, | அரசு மருத்துவமனை மேல் நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் புலியூர்குறிச்சி மேல் நிலை நீர் தேக்க தொட்டி பகுதியில் உள்ள மினி பவர் பம்பில் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல். | 5.00 லட்சம் | சி.சந்திரசேகர் | மதிப்பீட்டை விட 0.29% குறைவு |
| | | | சி.கே. ராகேஷ் | மதிப்பீட்டை விட 0.33% கூடுதல். |

அ.கு:- பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பு கொள்ள அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 254**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது எல்லா வேலைகளையும் Estimation பெற்று செய்ய தீர்மானம் வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்:3</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் பகுதி மேல் நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் பத்மனாபபுரம் மேல் நிலை நீர் தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யும் பகுதியில் உள்ள மினி பவர் பம்பில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய வருடாந்திர பராமரிப்பு பணிக்கு நகர் மன்ற

தீர்மானம் எண். 249, நாள் 31/07/2023 ரூ. 5.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கப்பட்டது. அதன் பேரில் 23/08/2023 ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி விவரம். |
|---|---|---|---|---|
| 1, | மார்கெட் பகுதி மேல் நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் பத்மனாபபுரம் மேல் நிலை நீர் தேக்க தொட்டி பகுதியில் உள்ள மினி பவர் பம்பில் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல். | 5.00 லட்சம் | சி.கே. ராகேஷ் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| | | | சி. சந்திரசேகர் | மதிப்பீட்டை விட 0.55% கூடுதல் |

அ.கு:- பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி.கே. ராகேஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பு கொள்ள அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 255**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது எல்லா வேலைகளையும் Estimation பெற்று செய்ய தீர்மானம் வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்:4</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் பகுதி மேல் நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் பத்மனாபபுரம் மேல் நிலை நீர் தேக்க தொட்டி Zone II -ல் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய வருடாந்திர பராமரிப்பு பணிக்கு நகர் மன்ற தீர்மானம் எண். 247, நாள் 31/07/2023 ரூ. 5.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி 23/08/2023 ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம். |
|---|---|---|---|---|
| 1, | மார்கெட் பகுதி மேல் நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் பத்மனாபபுரம் மேல் நிலை நீர் தேக்க தொட்டி பகுதியகளில் உள்ள பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல். | 5.00 லட்சம் | சி.கே. ராகேஷ் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| | | | சி. சந்திரசேகர் | மதிப்பீட்டை விட 0.55% கூடுதல் |

அ.கு:- பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திரு. சி.கே. ராகேஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பு கொள்ள அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 256**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண் 5</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலுள்ள தெரு விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை நீக்கி புதிதாக பல்புகள் மற்றும் LED விளக்குகள் வாங்கி பொருத்திட வருடாந்திர பராமரிப்பு செலவுக்கு நகர் மன்ற தீர்மானம் எண். 247, நாள் 31/07/2023-ல் ரூ. 5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி 23/08/2023-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விவரம். |
|---|---|---|---|---|
| | 21 வார்டுகளில் உள்ள தெரு விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல். | 5.00 | சி.கே. ராகேஷ் | மதிப்பீட்டை விட 0.05% குறைவு |
| | | | சி. சந்திரசேகர் | மதிப்பீட்டை விட 0.20% கூடுதல் |

அ.கு:- பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவ5ாக கொடுத்துள்ள திரு. சி.கே. ராகேஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பு கொள்ள அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 257**
**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண் 6</u>**

பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை மேல் நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் புலியூர்குறிச்சி மேல் நிலை நீர் தேக்க தொட்டி (Zone -II) -ல் உள்ள பகிர்மான குழாயில் ஏற்படும் நீர் கசிவினை சீர் செய்ய வருடாந்திர பராமரிப்பு பணிக்கு ரூ. 5,00,000/- க்கு நகர் மன்ற தீர்மானம் எண்.248 நாள் 31/07/2023-ல் அனுமதி வழங்கப்பட்டது அதன்படி 23/08/2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1, | அரசு மருத்துவமனை மேல் நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் புலியூர்குறிச்சி மேல் நிலை நீர் தேக்க தொட்டி பகிர்மான குழாயில் ஏற்படும் பழுதுகளை வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்ய. | 5,00,000/- | சி. சந்திரசேகர்<br><br>சி.கே. ராகேஷ் | மதிப்பீட்டை விட 1.82% குறைவு.<br><br>மதிப்பீட்டை விட 0.16% கூடுதல். |

<u>அ.கு:-</u> பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி. சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்ள அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 258**
**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்- 7</u>**

2022-2023 நிதியாண்டிற்கு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் தெரு எண்.5, மார்க்கெட் தெரு எண். 6, மார்க்கெட் தெரு எண். 7, தைக்கா பள்ளி தெரு எண். 29 கிரேவ்யார்டு ரோடு-1 கிரேவ்யார்டு ரோடு- 2 , பாரதி நகர், புலியூர்குறிச்சி ரோடு, பெருமாள் கோவில் ரோடு -1 ஆகிய சாலைகளில் ரூ. 79.45 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு 29/05/2023 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் M/s/ செந்தூர், கன்ஸ்ரக்சன் நிறுவனத்தார் மதிப்பீட்டை விட 0.11% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்ததால் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தம் செய்ய தெரிவிக்கப்பட்டதின் பேரில் 0.01% குறைவான விகிதத்தில் பணி செய்ய சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே மதிப்பீட்டினை விட குறைவான நிரக்கில் பணி செய்ய தெரிவித்த விவரம் மன்றத்தின் பார்வைக்கு.

அ.கு:- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**மன்ற தீர்மானம் எண் 259**
**மன்றம் பார்வையிடப்பட்டது**

**<u>பொருள் எண்- 8</u>**

2022-2023 நிதியாண்டிற்கு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட மணலி சாலை 3, வெட்டுக்காட்டுவிளை தெரு-1, வாழவிளை-1 பண்ணவிளை தெரு -1 காந்தி நகர் -26, மார்க்கெட் தெரு -9, ஞானியார் தெரு-2ல் ஆகிய சாலைகளில் ரூ.29.57 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு 02/06/2023 ஒப்பந்தப்புள்ளி

கோரப்பட்டதில் M/s. செந்தூர் கன்ஸ்ரக்சன் நிறுவனத்தார் மதிப்பீட்டைவிட 0.12% ஒப்பந்தப்புள்ளி கொடுத்ததால் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தம் செய்ய தெரிவிக்கப்பட்டதின் பேரில் 0.01% குறைவான விகிதத்தில் பணி செய்ய சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே மதிப்பீட்டினை விட குறைவான நிரக்கில் பணி செய்ய தெரிவித்த விவரம் மன்றத்தின் பார்வைக்கு.

அ.கு :- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**மன்ற தீர்மானம் எண் 260**
**மன்றம் பார்வையிடப்பட்டது**

**<u>பொருள் எண்- 9</u>**

2022-2023 நிதியாண்டிற்கு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட இரணியல் ரோடு சாலை 2, மணலி தெரு 8, சாவடி தெரு 2, சரல்விளை தெரு 2, சரல்விளை தெரு 3, சரல்விளை தெரு 1 , சரல்விளை ரோடு எ.பி.எம்.எ. தெரு 29, எ.பி.எம்.எ.தெரு 16 , 19 , மார்க்கெட் ரோடு 2, குட்டைகரை ரோடு, ஆகிய சாலைகளில் ரூ. 52 லட்சம் மதிப்பீட்டில் நகர்புற சாலை சீரமைக்கும் பணிக்கு 29/05/2023 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் M/s. செந்தூர் கன்ஸ்ரக்சன் நிறுவனத்தார் மதிப்பீட்டைவிட 0.74% ஒப்பந்தப்புள்ளி கொடுத்ததால் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தம் செய்ய தெரிவிக்கப்பட்டதின் பேரில் 0.01% குறைவான விகிதத்தில் பணி செய்ய சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே மதிப்பீட்டினை விட குறைவான நிரக்கில் பணி செய்ய தெரிவித்த விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

அ.கு:- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**மன்ற தீர்மானம் எண் 261**

**மன்றம் பார்வையிடப்பட்டது**

**<u>பொருள் எண்- 10</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 9192/2022/SBM-1 நாள் 21/08/2023 தூய்மை இந்தியா இயக்கம் 2.0 ன் படி இந்நகராட்சிக்கு கழிவு நீர் அகற்றும் வாகனம் ஒன்று வாங்கிட அனுமதி வழங்கப்பட்டது. வாகனத்தின்

கொள் முதல் விலை ரூ. 43.25 லட்சம்

மத்திய அரசு மான்யம் 50% - ரூ. 21.63 லட்சம்

மாநில அரசு மான்யம் 33% - ரூ. 14.27 லட்சம்

நகராட்சி பங்கு தொகை 17%- ரூ. 7.35 லட்சம்

மன்றத்தின் பார்வைக்கு.

அ.கு:- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**மன்ற தீர்மானம் எண் 262**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்- 11</u>**

பத்மனாபபுரம் அரசு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் மருத்துவ அலுவலர் தனது 10/07/2023 தேதிய கடிதத்தில் நகராட்சிக்குப்பட்ட அரசு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் நான்கு துணை சுகாதார நிலையங்கள் உள்ளன அவைகள் செயல்படுவதற்கு கட்டிடம் இல்லாமல்

உள்ளது எனவும், இதில் வாராந்திர கர்ப்பிணி பெண்கள் ஆய்வு, குழந்தைகளின் தடுப்பூசி மற்றும் சத்து மாத்திரைகள் வைத்திருப்பது என பல்வேறு பணிகள் நடைபெற உள்ளது. இதனை கருத்தில் கொண்டு நாகர்கோவில் துணை சுகாதார பணிகள் மூலம் ஒரு கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே நகராட்சி இடம் ஒதுக்கீடு செய்தால் சுகாதார துறை மூலம் கட்டிடம் கட்டிக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்ட 2 இடங்களில் ஒரு இடத்தை மன்றம் பரிசீலித்து முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1) நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள ஆதார் மையக் கட்டிடம் (பழுதடைந்துள்ளது) அதனை அப்புறப்படுத்தி 40’ x 30’ அளவு இடம் ஒதுக்கீடு செய்யலாம்.

2) பெருமாள் கோவில் ரோடு பக்கம் பத்மனாபபுரம் ‘A’ கிராம புல எண். B11/28-ல் 0.30.00 ஏர்ஸ் இடம் வண்டி பாதை அரசு புறம்போக்கு இடம் காலியாக உள்ளதை ஒதுக்கீடு செய்யலாம்.

அ.கு:- மேற்படி ஏதாவது ஒரு இடத்தில் மட்டும் சுகாதார துறை மூலம் கட்டிடம் கட்டி துணை சுகாதார நிலையமாக பயன்படுத்திக் கொள்ள மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**மன்ற தீர்மானம் எண் 263**
**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**
**<u>பொருள் எண்- 12</u>**

பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட மருந்து கோட்டை உரக்கிடங்கில் Bio-Mining முறையில் குப்பைகளை தரம் பிரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மேற்படி பணியை செய்து வரும் Gorantla GewSynthetics P.Ltd., Chennai நிறுவனம் பிளாஸ்டிக் கழிவுகளை மறு சுழற்சி செய்து தரும் இயந்திரத்தை பொருத்த RDS கழிவுகளை சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பி வைக்க சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி நிறுவனம் பிளாஸ்டிக் கழிவுகளை அரைக்கும் இயந்திரத்தை உரக்கிடங்கிற்கு அருகில் வைத்துக் கொள்ள இடம் ஒதுக்கி தருமாறும் அதற்கு அண்ணா பல்கலைக் கழகம், சென்னை மூலம் அறிவுரை பெற்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மூலம் தடையில்லா சான்று பெற்று உரக்கிடங்கில் இடம் ஒதுக்கீடு செய்து தருமாறு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பிளாஸ்டிக் கழிவுகளை அரைக்கும் இயந்திரத்தை உரக்கிடங்கில் உள்ள இடத்தில் வைத்து பணி மேற்கொள்ள

Gorantla GewSynthetics P.Ltd., Chennai நிறுவனத்திற்கு உரிய நிபந்தனையை பின்பற்றி இடம் ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:-** அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 264**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்- 13**

இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள சிறப்பு சேமநல நிதித் தொகையினை ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு கீழ்கண்டவாறு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | சந்தா தொகை | வட்டித் தொகை | நகராட்சி பங்குத் தொகை | பணியாளர் பெயர் மற்றும் பதவி | ஓய்வு பெற்ற நாள் | வழங்க வேண்டிய தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1, | 2960 | 30000 | 10000 | திரு. எ. இராஜகோபால் துப்புரவு பணியாளர் | 30/09/2021 | 42960/- |
| 2 | 2960 | 8362 | -- | திரு.ஆர். பாபு (இறப்பு) துப்புரவு பணியாளர் | 05/08/2019 | 11322/- |
| 3. | 2960 | 8282 | -- | திரு. எ. முருகன்(இறப்பு) துப்புரவு பணியாளர் | 29/10/2021 | 11242/- |
| 4, | 2960 | 14622 | 10000 | திரு. வி. இராமசந்திரன் அலுவலக உதவியாளர் | 31/07/2021 | 27582/- |
| 5 | 2960 | 8282 | 10000 | திரு.எஸ். ஜோணி துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 30/04/2021 | 21242/- |
| 6, | 2960 | 24547 | 10000 | திரு. பி. பொன்னப்பன் மின்கம்பி உதவியாளர் | 28/02/2021 | 37507/- |

அ.கு;- 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரிசை எண். 2 மற்றும் 3ல் உள்ள பணியாளர்களுக்கு பணியிலிருந்து காலமான காரணத்தினால் நகராட்சி பங்குத் தொகை வழங்க வழிவகை இல்லை.

**மன்ற தீர்மானம் எண் 265**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்- 14</u>**

பத்மனாபபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 22 எண்ணம் நீர் நிலைகள் உள்ளன. இதில் முதற் கட்டமாக 4 எண்ணம் மட்டும் சீரமைப்பு செய்ய விரிவான திட்ட மதிப்பீடு மேற்கொள்ளும் பணிக்கு நகராட்சியில் தகுதி வாய்ந்த தொழில் நுட்ப பணியாளர் இல்லாததால் தனியார் நிறுவனம் மூலம் திட்ட மதிப்பீடு தயார் செய்யவும் , தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து மதிப்பீடு தயார் செய்ய ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.4,50,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 266**
**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்- 15</u>**

பத்மனாபபுரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிகள் வேகம் குறைவாகவும், Antivirus இல்லாததாலும், கணினியை சரியாக இயக்க முடியவில்லை. Hard disk Ram, Antivirus சாதனங்கள் பொருத்த வேண்டியுள்ளதால் 13 கணணிகளுக்கு பொருத்த ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. 75,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 267**
**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்- 16</u>**

பத்மனாபபுரம் நகராட்சியில் மூலதன மான்ய நிதி 2022-2023 (CGF GRANT - 2022-2023) -ம் ஆண்டு திட்டத்தில் கீழ்வரும் அட்டவணையில் காணும் பணிக்கு 23/06/2023 ல் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தக் காரரின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1, | பத்மனாபபுரம் நகராட்சியில் மூலதனமான்ய நிதி 2022-2023 (CGF GRANT-2022-2023) திட்டத்தின் கீழ் உதயகிரி | 234.00 | ராஜ் கன்ஸ்ட்ரசன் | 0.03% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | கோட்டை பகுதியில் பறவைக் கூடம் மற்றும் மீன்வளம் கட்டுதல் பணி. | | | |
| | | | டி, ஜஸ்டின் குமார் | 0.42% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **ராஜ் கன்ஸ்ட்ரக்சனஸ்** ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

(ந.க.எண். 927/2022/இ1)

**மன்ற தீர்மானம் எண் 268**
**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்- 17</u>**

பத்மனாபபுரம் நகராட்சியில் 15வது நிதிக்குழு மானியம் 2022-2023 (Tied Grant) திட்டத்தின் கீழ் நகராட்சி உரக்கிடங்கில் இன்சினேட்டர் (Incinetor) சாதனம் ரூ. 29000/- மதிப்பீட்டில் விநியோகம் செய்து பொருத்தி தரும் பணிக்கு 09/06/2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ் வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றன. ‘

| வ. எண் . | ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள ஒப்பந்தக்காரன் பெயர் மற்றும் முகவரி | மதிப் பீடு ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1, | திரு. சி. ராகேஷ்<br>நகராட்சி ஒப்பந்தக்காரர்<br>கரைகண்டார் கோணம்<br>மணலி, தக்கலை | 29000/- | 22500/- | மதிப்பீட்டினை காட்டிலும் 2.17% குறைவு |
| 2, | திரு. ஜாண்ரோஸ்<br>நகராட்சி ஒப்பந்தக்காரர்<br>பரப்பன் விளை<br>வெள்ளிகோடு<br>முளகுமூடு | | 23000/- | |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை காட்டிலும் 2.17% குறைவான ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள திரு. சி. ராகேஷ்

ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:- பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 596/2023/இ1)

**மன்ற தீர்மானம் எண் 269**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்- 17</u>**

பத்மனாபபுரம் நகராட்சிக்குச் சொந்தமான காமராஜர் பேருந்து நிலையம் பத்மனாபபுரம் A கிராமம் புல எண். B8/89-ல் 0.41.00 ஏர்ஸ் பரப்பளவில் அமைந்துள்ளது. தற்போது பேருந்து நிலையத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க ரூ.6.39 லட்சத்தில் மதிப்பீடு தயாரித்து நிர்வாக அனுமதி பெறப்பட்டது. எனவே . பேருந்து நிலையம் விரிவாக்கம் செய்ய இடம் தேவையிருப்பதால் பேருந்து நிலையத்தின் தென்கிழக்கு பகுதியில் உள்ள புல எண்கள் B8/99, B8/100, B8/101-ல் உள்ள 0.02.60 ஏர்ஸ் இடத்தினை நிலார்ஜிதம் செய்ய மன்றம அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு-</u> காமராஜர் பேருந்து நிலையத்தில் புதிய பேருந்து நிலையம் அமைத்து பணிகள் செய்ய விரிவாக்கம் செய்ய வேண்டியுள்ளதால் 0.02.60 ஏர்ஸ் இடத்தினை உரிய வழிமுறையில் நிலார்ஜிதம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 270**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்- 19</u>**

பத்மனாபபுரம் நகராட்சியில் 2011-2012 முதல் 2021-2021 வரை நடைபெற்ற வளர்ச்சி பணிகள் திட்டப் பணிகளில் வேலைகள் எடுத்து செய்த கீழ்வரும் ஒப்பந்தக்காரர்களின் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட 5% FSD ஆகிய வைப்புத் தொகையினை வழங்கிட விண்ணப்பித்துள்ளனர்.

1)திரு. ற்றி.எட்வின் ஜெயக்குமார், விராலி காட்டுவிளை

2)திரு. சி. ஸ்டீபன், மூலச்சல்

மேற்கண்ட ஒப்பந்தக்காரர்களின் வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகை என்பதால் தணிக்கை

தடைகளுக்குட்பட்டு தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 742/2023/இ1.)

**மன்ற தீர்மானம் எண் 271**
**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்- 20**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 1725/2022/எம்எ1 நாள் 21/08/2023-ம் தேதிய கடிதத்தில் நகராட்சிகளின் பயன்பாட்டிற்கு புதியதாக வாகனம் கொள்முதல் செய்ய முன் மொழிவுகள் அனுப்ப கோரப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சியில் தற்போது பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் வாங்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டதால் நகர் மன்ற தலைவர் பயன்பாட்டிற்கு ஒரு Scorpio மற்றும் நகராட்சி ஆணையர் பயன்பாட்டிற்கு ஒரு Bolero வாகனம் புதிதாக வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.649/2023/இ1)

**மன்ற தீர்மானம் எண் 272**
**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**அக்டோபர் 2023-ம் ஆண்டுக்கான நகர் மன்ற சாதாரண கூட்டப் பொருட்கள்.**

**பொருள் எண்:- 21**

பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அரசால் வழங்கப்பட்டுள்ள தூசி பட்டா பெற்றுள்ள உரிமைதாரர்கள் நகராட்சிப் பகுதியில் கட்டுமானம் செய்யப்பட்டிருப்பின் அத்தகைய குடியிருப்புகளுக்கு அத்தியாவசிய வசதிகள் மேற்கொள்ளப்படாததால் நகராட்சி நிதி இழப்பு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு மேற்படி தூசி பட்டா மனையில் கட்டிடம் கட்டியுள்ள குடியிருப்புதாரர்களுக்கு (மேற்கோப்பு) சொத்து வரி விதிப்பு செய்யவும், குடிநீர் வசதி

செய்யவும் பின்னாளில் அரசால் தூசி பட்டா ரத்து செய்யப்பட்டால் நகராட்சியால் விதிக்கப்பட்ட சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்புகளை துண்டிப்பு செய்ய குடியிருப்புதாரர்கள் சம்மதம் தெரிவித்து உறுதி மொழி பத்திரம் பெற்று உரிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடவடிக்கை தொடர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**<u>அகு:-</u>** சென்னை உயர் நீதி மன்ற வழக்கு எண்.25381/2022 ற்கு 22/08/2023 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பில் நீர் நிலை புறம் போக்கு மற்றும் இதர ஆட்சேபணை புறம் போக்கு நிலங்களில் கட்டிடம் ஏதும் கட்டக் கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளை கடைபிடித்து நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 273**
**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்:- 22</u>**
அரசாணை (4D) எண். 39, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல் துறை நாள் 14/09/2023-ன் படி பத்மனாபபுரம் நகராட்சி தக்கலை காமராஜர் பேருந்து நிலையம் கட்ட கலைஞர் நகர்புற மேம்பாட்டு நிதி 2023-2024ம் ஆண்டு நிதி ரூ.3.20 கோடி அரசு மான்யமாகவும், நகராட்சி பங்கு தொகை ரூ.3.19 கோடி ஆக மொத்தம் ரூ.6.39 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அரசாணை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
அ.கு:- 1) பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2)அரசாணையில் தெரிவித்துள்ள நகராட்சி பங்கு தொகை ரூ.3.19 கோடியை முழு மான்யமாக வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு கடிதம் அனுப்பி வைக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 274**
**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்:23</u>**

பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட தக்கலை மீன் மார்க்கெட்டில் உள்ள கட்டிடங்களிலிருந்து வெளியேறும் தண்ணீரை உறிஞ்சு குழி அமைத்து பைப் லைன் வசதி மற்றும் அம்மா உணவகம் முன்பு சிமெண்ட் நடைபாதை அமைக்கவும் அதில் உறிஞ்சு குழி அமைத்தல் மற்றும் அம்மா உணவகம் முன்பு உள்ள நுழைவு வாயில் கதவை

சரி செய்ய போன்ற பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1,75,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு:- அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 275**
**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண். 24</u>**

பத்மனாபபுரம் நகராட்சி 1 முதல் 21 வரை உள்ள நகர் மன்ற உறுப்பினர்கள் தத்தம் வார்டுகளில் அவசர அவசியம் கருதி கீழ்வரும் பராமரிப்பு வேலைகளை செய்து தர கோரிக்கை அளித்துள்ளனர்.

**<u>திரு. ஞா. அருள்சோபன் (நகர் மன்றத் தலைவர் வார்டு எண்-2)</u>**

1.மூன்று முக்கன் விளை அருகில் கன்வென்சன் மைதானம் அருகில் மின் கம்பம் மாற்றியமைத்தல்.

2. மூலச்சல் தெரு 1-ல் விடுபட்ட இடத்தில் பேவர் பிளாக் கல் அமைத்தல்.

**<u>திருமதி. எச். சுலைகாபேகம் (வார்டு எண். 3)</u>**

I)F II -24 எண் கொண்ட விளக்கு தூணில் தெருவிளக்கு அமைத்தல்.

F I - 1 எண் கொண்ட விளக்கு தூணில் தெருவிளக்கு அமைத்தல்.

F II -24 எண் கொண்ட விளக்கு தூண் சாந்துள்ளதை மாற்றியமைத்தல்.

F I -15 எண் கொண்ட விளக்கு தூண் பழுதானதை மாற்றியமைத்தல்.

II) மணலி டிராகார் பேலஸ் முதல் (மெயின்ரோடு) மேட்டுக்கடை ஜங்சன் (Higher Secondary School, Thuckalay) எதிர்புறம் வரை மழைநீர் வடிகால் சரிபடுத்தியமைத்தல்.

**<u>திருமதி. உ. மும்தாஜ் (வார்டு எண். 4)</u>**

1) தர்ஹா தெரு FI-19 தெருவிளக்கு தூண் மாற்றுதல், கூடுதலாக பக்கத்து விளக்கு தூணில் தெருவிளக்கு அமைத்தல்.
2) FI-19 பக்கம் தண்ணீர் எடுக்க ஒரு பகிர்மான குழாய் 30 மீட்டர் அளவு அமைத்தல்.
3) சரல் விளை ஆலமூடு கோவில் அடுத்து 2 ½ அடி வழிப்பாதை அமைத்தல்.

4) சாமுண்டீஸ்வரி கோவில் பக்கம் உள்ள போகும் சாலையில் சிறிய அளவு சாலை அமைத்தல்.
5) FI-19 விளக்கு தூண் அடுத்து விளக்கு தூண் 2 லைன் உள்ளது கூடுதலாக ஒரு மின் கம்பி இணைத்து ஒரு விளக்கு அமைத்தல்.
6) மக்காப் பாளையம் தெருவில் உள்ள சாலையை சீர்படுத்துதல்.
7) தர்ஹாதெரு FI-18 பக்கம் செல்லும் (70 அடி) இண்டர்லாக் அல்லது சிமெண்ட தளம் அமைத்தல்.
8) தர்ஹா ரோடு FI*-23 விளக்கு தூண் அருகில் உள்ள பாதையில் பாதி தூரம் சிமெண்ட் தளம் உள்ளது. மீதி பாதி தூரம் 75 மீ அளவு காட்டுக்குளம் வரை சாலை அமைத்து 10 அடி பாதையாக மாற்றிதர வேண்டுதல்.
9) FI-18 விளக்கு தூண் முதல் FI -19 வரை 30 மீட்டர் தூரம் ரோடு அமைத்தல் .
10) மக்காபாளையம் 24/52 A2 வீட்டு பக்கம் முதல் கபர் பழக்கடை பக்கம் வரை ரோடு சரி செய்தல்.
11) மக்காபாளையம் முதல் முடுக்கு FI-14 வரை பாதை அமைத்தல்.

**. திரு. கு. செந்தில்குமார் (வார்டு எண். 7)**

1)சாரோடு முள்ளிக்குளம் பைப் லைன் அமைத்தல்.

2) ஆர்.சி. தெருவில் கவர் ஸ்லாப் அமைத்தல்.

**திரு. ஐ. நாகராஜன் (வார்டு எண். 8)**

1) ராமசாமி கோவில் குறுக்கு தெருவில் புதியதாக மின் கம்பம் அமைத்ததல்.
2) ராமசாமி குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல்.
3) **Lane -7 CC ரோடு அமைத்தல்**
4) **Lane 15100/R 022 CC ரோடு அமைத்தல்.**
5) **Street 2 and 5 பட்டாணிகுளம் தெரு CCரோடு அமைத்தல்**
6) **செட்டி தெரு Lane 1, 2, 3, 4 CC ரோடு அமைத்தல்.**

**திரு. வினோத் குமார் (வார்டு எண். 9)**

1)வார்டு எண். 9, வடக்கு தெரு 2-வது சாலை நடுப்பகுதியில் உள்ள மின் கம்பத்தை அகற்றி வேறு இடத்திற்கு மாற்றி தருதல்.

**திருமதி.ஷீபா(வார்டு எண். 10)**

வார்டு எண். 10 யாதவர் தெருவில் இருந்து செல்லும் குறுக்கு சந்தில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் பகிர்மான குழாய் பதிக்க கோருதல்.

**திருமதி. பிரியதர்ஷினி (வார்டு எண். 11)**

1)புதிய குடிநீர் இணைப்பு பெற வேண்டி குமரன் திட்டை பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி.

2) குமரன் திட்டை சாலையில் தடுப்பு சுவர் அமைத்தல்.

**திரு. எ. ஷேக்முகம்மது (வார்டு எண். 12)**

1) அண்ணா கலையரங்கம் புதியதாக கட்டித் தர கோரியது.
2) அம்மா உணவகத்தில் புதிய கேஸ் அடுப்பு ஏற்படுத்தி தருதல்.

**திருமதி.ஆர். சபீனா (வார்டு எண். 13)**

1)13வது வார்டில் மார்க்கெட் சாலை- 10 மற்றும் மார்க்கெட் சாலை -3 சாலைகள் செப்பனிடுதல்.

2) அம்மன் கோவில் டானா முடுக்கு வரை மழைநீர் வடிகால் சிலாப்புகள் அமைத்தல்.

3) சந்தை ரோட்டில் உள்ள சின்டெக்ஸ் அடிப்பாகம் (கீழ்தளம்) உடைந்துள்ளதை சரிபடுத்துதல்.

**வார்டு எண். 14 நகர் மன்றத் தலைவர் நகர் அவர்களின் கோரிக்கை**

முல்லை நகர் சாலையில் உள்ள எப்1-35 மின்கம்பத்தை மாற்றி அமைத்தல்

**திருமதி. ம. கீதா (வார்டு எண். 15)**

1)இராமன் பறம்பு தெருவில் (திரு. ராஜீ என்பவர் வீடு முதல் மணிகண்டன் வீடு வரை) பேவர் கிளாக் பதிக்கும் பணி.

2)பேச்சியம்மன் கோவில் முன்பாக 15 சிலாப் மற்றும் பண்டார குளத்தின் முன்பாக வழிப்பாதையில் 4 சிலாப் அமைத்தல்.

**திருமதி. த. சுகந்தி (வார்டு எண். 18)**

1) தென்கரை வாணியவிளை செல்லும் வழியில் பேவர் பிளாக் அமைத்தல்.
2) தென்கரை வாணியன் விளையில் வழிப்பாதையில் நிற்கும் மின் கம்பத்தை அகற்றி வேறு இடத்தில் மாற்றியமைத்து புதிய மின் விளக்கு அமைத்தல்.

**திரு. கு. சிவா (வார்டு எண். 19)**

சந்தைவிளை உள்ள சிமெண்ட் சாலையை 1:4 கான்கிரிட் தளம் அமைத்தல்.

**திரு. இரா. உண்ணி கிருஷ்ணன் (நகர் மன்ற துணைத் தலைவர் வார்டு எண். 20)**

1)20வது வார்டில் இரண்டு இடங்களில் 3" PVC (பைப் லைன் பகிர்மான குழாய்) அமைத்து புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்குதல்.

2)கரும்பாறை ரோடு வலது புறம் முத்தையன் 5/27 வீட்டின் அருகிலிருந்து அருள் மிகு பத்ரேஸ்வரி கோவில் வரை PVC 3" குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல்.

3)குமாரகோவில் ஜங்சன் உயர் மின் கோபுர விளக்கு அருகில் இருந்து திரு. ராஜ்குமார் (சிவதாணு) அவர்கள் வீடு வரை PVC 3" பகிர்மான குடிநீர் குழாய் பதித்தல்.

4)அஞ்சாலி விளை ஐயப்பன் 5/50 வீட்டு முன் ஓடையில் கிரில் அமைத்தல்.

**திருமதி. கி.ஸ்ரீதேவி (வார்டு எண். 21)**

1)குமாரகோவில் கீழ் தெருவில் சுமித்ரா அவர்கள் வீட்டிற்கு முன்பக்கம் உள்ள தெரு சாலையை கான்கிரீட் சாலை அமைத்தல்.

2)குமாரகோவில் பிள்ளையார் கோவில் செல்லும் வழியில் ஓடையில் உள்ள சிலாப் உடைந்துள்ளதை சரி செய்து புதிய சிலாப் அமைத்தல்.

3)ஆசான் கிணறு மார்த்தாண்டம்பிள்ளை வீட்டின் முன்புறம் குடிநீர் குழாய் அடைப்பை சரி செய்து தரக் கோருதல் ஓடையை சரி செய்தல்.

. மேலே கண்டுள்ள நகர் மன்ற உறுப்பினர்கள் அளித்துள்ள கோரிக்கை மனுவில் குறிப்பிட்டுள்ள பணிகள் நகராட்சியின் தற்போதுள்ள நிதி நிலையை கருத்தில் கொண்டு ரூ.1,00,000/- மதிப்பீட்டிற்குள் வரும் பணிகளை முதற்கட்டமாக செய்வதற்கும், 1 முதல் 21 வரை உள்ள வார்டுகளில் தலா ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டிற்குள் தேர்வு செய்யும் பணிகளுக்கு 2023-2024 ம் நிதியாண்டில் நகராட்சி பொது நிதியில் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- 1) வார்டு 1 முதல் 21 வரை உள்ள நகர் மன்ற உறுப்பினர்கள் அளித்துள்ள கோரிக்கை மனுவில் தலா ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டிற்குள் பணிகள் தேர்வு செய்து மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

2)இந்நகராட்சியில் தற்போது உத்தேசமாக ரூ. 13.20 கோடிக்கு மேல் பல்வேறு தலைப்புகளில் செலுத்த வேண்டிய தொகை நிலுவை விபரத்தை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

3) 2023-2024ம் ஆண்டு பொது நிதியில் செய்யப்படும் பணிகளுக்கு பட்டியல் தொகையினை நிதி நிலையை பொறுத்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 276**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண். 25**

பத்மனாபபுரம் நகராட்சியில் உள்ள 8 மேல் நிலை நீர் தேக்க தொட்டிகளில் தினசரி குடிநீர் நிரப்பி விநியோகிக்கப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகத்தின் போது குடிநீரின் தரத்தை மாதந்தோறும் பரிசோதனை செய்து வழங்க வேண்டும் என நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை , நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சியில் உள்ள 8 மேல் நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து விநியோகிக்கப்படும் குடிநீரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்', நாகர்கோவிலில் உள்ள சோதனை கூடத்தில் ஆய்வு செய்து அறிக்கை பெற ஏற்படும் ஓராண்டுக்கான உத்தேச செலவினம் ரூ.1,50,000/- ஐ 2023-2024ம் ஆண்டு குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 277**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண். 26**

பத்மனாபபுரம் நகராட்சி சரஸ்வதி அம்மன் கோவில் முன் பகுதியில் 1.5 HP Submercible Pumset அமைக்கும் பணியினை ரூ.80,000/- மதிப்பீட்டில் 15வது நிதிக்குழு (15th CFC) நிதியின் கீழ் மேற்கொள்ள நகர் மன்றத் தீர்மானம் எண். 51 நாள் 29/07/2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி பணிக்கு 15வது நிதிக்குழு (15th CFC) நிதியின் கீழ் (2021-2022)ல் நிதி ஒதுக்கப்படாததால் ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை. இந்நிலையில் தற்போது தண்ணீர் வசதியை மேற்படி பகுதியில் நகராட்சியால் செய்து கொடுக்க வேண்டிய அவசர அவசிய பணி என்பதால் அதே மதிப்பீட்டில் 2023-2024ம் ஆண்டு குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் பணி மேற் கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 278**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண். 27</u>**

பத்மனாபபுரம் நகராட்சியில் கீழ்வரும் வரி விதிப்பு தொகையினை வசூல் செய்ய வழிவகை இல்லை என்பதால் மேற்படி காலிமனை வரியினை ரத்து செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வரிவிதிப்பு எண். | பெயர் | அரையாண்டு வரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1, | 151/007/900496 | கவுஸ்முகம்மது | 5372 | 48,344/- |

அ.கு:- மேற்கண்ட தொகையினை ரத்து செய்ய மன்ற அனுமதிக்கு.
(ந.க.எண். அ1/1321/2023)

**மன்ற தீர்மானம் எண் 279**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண். 28</u>**

பத்மனாபபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலைய கடைகளுக்கு 27/09/2023-ல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு.

| **வ,எண்.** | **உரிம இனம்** | **ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ (ஒரு மாத வாடகை)** |
|---|---|---|---|
| 1, | பேருந்து நிலைய கடை எண்-11 | வி.எஸ். சிவசெந்தில்குமார் | 5400/- |
| 2, | பேருந்து நிலைய கடை எண்.13 | கே. சண்முகம் | 5500/- |
| 3, | பேருந்து நிலைய கடை எண்-17 | 1)பி. ஜோஷி குமார்<br>2)கே. ஸ்ரீகுமார் | 4500/-<br>4200/- |

அ.கு:- வரிசை எண். 1, 2 க்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது. வரிசை எண். 3-க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசாணை பெறப்பட்டு 31/10/2023 அன்று டெண்டர் கோரப்படவுள்ளதால் விரைவில் காலி செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே

தற்போது நிறுத்தி வைத்து வைப்புத் தொகை திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1250/2020/அ2)

**மன்ற தீர்மானம் எண் 280**

**தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது**

**<u>பொருள் எண். 29</u>**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். L3/14331/2022, நாள் 03/10/2023 ல் சென்னை உயர் நீதி மன்ற மதுரை கிளையில் திரு. எ. வின்ஸ் ஆன்றோ மற்றும் 2 நபர்களால் தொடரப்பட்ட வழக்கு WP (MD)No. 25381 of 2022- ற்கு 22/08/2023 அன்று பிறப்பிக்கப்பட்ட நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் கீழ்கண்டுள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

" மேற்படி வழக்கில் அறிவுறுத்தப்பட்ட நீர் நிலை புறம்போக்கு (மிகவும் ஆட்சேபனை புறம்போக்கு நிலங்கள் ) மற்றும் இதர புறம்போக்கு (ஆட்சேபனை புறம் போக்கு நிலங்கள்) நிலங்களில் எதிர்வரும் சந்ததியினருக்கு பாதுகாத்து கொடுக்கும் பொருட்டு பொது மக்களின் பயன்பாடு என்ற நோக்கத்திற்காக அரசுக் கட்டிடங்கள் ஏதும் கட்டக் கூடாது எனவும், ஏற்கனவே கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்ற இனங்களில் கூடுதல் கட்டிடங்கள் எதுவும் கட்டக் கூடாது எனவும், நீர்நிலை புறம்போக்கில் கட்டப்பட்டு வரும் அனைத்து அரசு கட்டிடங்களின் தரத்தினை உறுதிபடுத்துமாறும் தனி நபர்கள் நீர்நிலை புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து எவ்விதமான கட்டிடங்களும் கட்டுவதை தவிர்க்கும் விதமாக அந்நிலங்களை கண்காணித்து மேல் நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து துறை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது "

அ.கு:- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1646/2023/ற்றி.பி.ஐ)

**மன்ற தீர்மானம் எண் 281**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண். 30</u>**

பத்மனாபபுரம் நகராட்சி அலுவலகத்தின் தென்புறம் உள்ள வெளி சுற்று சுவர் தற்போது பெய்த கனமழை காரணமாக சிதலமைடந்து வெடிப்பு ஏற்பட்டுள்ள சுற்று சுவரை இடித்து அப்புறப்படுத்தி புதியதாக சுற்று சுவர் கட்டுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1569/2023/இ1)

**மன்ற தீர்மானம் எண் 282**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண். 31</u>**

பத்மனாபபுரம் நகராட்சியில் கொசு ஒழிப்பு பணிக்கு காவேரி மகளிர் சுய உதவிக் குழு மூலம் 16 பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ஊதியத்தில் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது காவேரி மகளிர் சுய உதவி குழு பணியாளர்கள் கூடுதல் ஊதியம் கேட்டு மனு அளித்துள்ளனர். எனவே கொசு ஒழிப்பு பணியாளர்களுக்கு ஊதியம் நிர்ணயம் செய்வது தொடர்பாக மன்ற அனுமதிக்கு.

<u>அ.கு:-</u> நமது நகராட்சி பகுதியில் டெங்கு தடுப்பு பணியாளர்களுக்கு 1 நாளைக்கு ரூ.250/- வீதம் தினக்கூலி நிர்ணயம் செய்யப்பட்டு, காவேரி மகளிர் சுயஉதவிக்குழு மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பத்மனாபபுரம் நகராட்சி தனி அலுவலரது தீர்மானம் எண். 1608 நாள் 12/03/2020 இன் படி 1 நாளைக்கு ரூ.250/- நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பகுதி நேரமாகவே இப்பணி மேற்கொள்ளப்படும் நிலையில், இக்கூலி நிர்ணயம் செய்து 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டபடியால் ரூ. 300/- நிர்ணயம் செய்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 283**

**புதிய ஒப்பந்தபுள்ளி படி 300நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது புதியதாக ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டு முடிவு செய்யப்படும்**

**<u>பொருள் எண். 32</u>**

பத்மனாபபுரம் நகராட்சி வார்டு எண். 8 விவேகானந்தர் தெருவில் உள்ள பொது கழிப்பிடத்தை கட்டணக் கழிப்பறையாக மாற்றி பொது ஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 284**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண் 33</u>**

அரசாணை (நிலை)எண் 33 சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைதுறை(சந4-1) நாள் 7.6.2023 ல் மாண்புமிகு தமிழக முதலமைச்ச அவர்களால் சட்டமன்ற பேரவையில் 7.5.2022 அன்று சட்டபேரவை விதி எண் 110ன் கீழ் வெளியிடப்பட்ட குறிப்பின்படி அரசு பள்ளிகளில் 1 முதல் வரை வகுப்பு மாணவ மாணவிகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் இரண்டாவது கட்டம் செயல்படுத்த

உத்தரவிடப்பட்டுள்ளபடி பத்மனாபபுரஙம நகரட்சி எல்லைகுட்பட்ட 7 அரசுபள்ளிகளுக்கு பொதுசமையலறையிலிருந்து கொண்டுவரப்படும் காலை உணவினை பள்ளி மாணவர்களுக்கு பரிமாறும் பணிக்கு100 மாணவர்களுக்கு ஒருவர் என பணியாளர் அல்லது சுய உதவிகுழு இல்லம்தேடி கல்வி பணியாளர் அல்லது விருப்பம் உள்ள குழந்கைளின் தாயார் ஆகியோரில் ஒருவர் அந்தந்த பள்ளிகளின் தலைமையாசிரியரின் அனுமதியோடு நியமித்து மாதந்தோறும் ரூ.1500/- மதிப்பூதியம் கல்வி நிதி, பொது நிதியிலிருந்து வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்17404/2022/எம்-1 நாள் 29.5.2023ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி எல்லைகுட்பபட்ட 7 அரசு பள்ளிகளில் காலை உணவினை பரிமாறும் அந்தந்த தலைமையாசிரியர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் தாயார்களுக்கு மாதம் ரூ.1500/- மதிப்பூதியம் வழங்குவதற்கு 25.1.2023 முதல் 31.3.2024 வரை மதிப்பூதியம் ரூ.2,35,000/-ஆகும். மேற்கண்ட மதிப்பூதியத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு- 1.அனுமதிக்கலாம்

2.அரசு மான்யம் வழங்கும்பட்சத்தில் பொது நிதியில் ஈடுசெய்ய அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 285**
**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண் 34</u>**

பத்மனாபபுரம் நகராட்சியில் 2019-2020 ம் ஆண்டு பொது நிதியின் கீழ் நகராட்சி அலுவலகத்தில் மழைநீ சேமிப்பு கட்டமைப்பு அமைத்தல் பணி ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் திரு.ஜெகஸ்லால் ஒப்பந்தக்காரல் பணிமேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. வருவாய் நிதியில் போதிய தொகை இல்லாததால் நாளது தேதி வரை பட்டியல் தொகை வழங்கப்படாமல் உள்ளது. தற்போது நிதிநிலைமைகேற்ப மேற்படி பணிக்குரிய பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.அனுமதிக்கலாம்

**மன்ற தீர்மானம் எண் 286**
**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண் 35</u>**

மகளிர் உரிமை தொகை விளம்பர பலகை ஐந்து எண்ணம் அமைப்பதற்கு பட்டியல் தொகை ரூ.8,310/- மற்றும் Switch Bharat ISL 2.0 Event Programme செய்வதற்கு டீ வடை ரூ.2000/- T Shirt பட்டியல் படி ரூ.6500/- மருத்துவ முகாம் நடத்துவதற்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களுக்கு பட்டியல் படி செலவு ரூ.6640/- துப்புரவு பணியாளர்களை இனம் கண்டு அறிதல் கணக்கெடுப்பு பயிற்சி பத்மனாபபுரம் குளச்சல்,குளித்துறை மற்றும் கொல்லங்கோடு பணியாளர்களுக்கு பத்மனாபபுரம் நகராட்சியில் வைத்து திருநெல்வேலி மண்டல இயக்குநர் அவர்களின் கடிதபடி பயிற்சி வகுப்பு 29.9.2023 ல் நடைபெற்றது. அதற்காக பயிற்சியாளர்களுக்கு மதிய உணவு மற்றும் டீ வடை செலவு பட்டியல்படி ரூ.7950/- மேற்படி பயிற்சி வகுப்பிற்கு LED Projector பட்டியல்படி ரூ.4000/-யும் அதற்குரிய Pad மற்றும் பேனா பட்டியல்படி செலவு ரூ.610/-யும், செலவிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட செலவுகள்

| | |
|---|---|
| 1.மகளி உரிமை தொகை விளம்பர பலகை | = 8310 |
| 2. Switch Bharat ISL 2.0 Event Programme | = 15140 |
| 3.பயிற்சி வகுப்பு | =12560 |
| | ----------- |
| | =36010 |
| | ----------- |

மேற்டி செலவுகள் அனைத்தும் துப்புரவு ஆய்வாளரால் செலவிடப்பட்டுள்ளது.மேற்படி செலவிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 287**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

நகர்மன்றத்தலைவர்
பத்மனாபபுரம் நகராட்சி